3. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் விவர அறிக்கை.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து முதலியவை பற்றி கொள்கை விளக்கக் குறிப்பின்மேல் சட்ட மன்றத்தில் 21—3—1978-ல் நடைபெற்ற விவாதத்தின் போது உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்கள். "சேர்ந்து வந்த இழப்பிற்குக் காரணம் மூலதன முதலீடு முழுவதும் ஏற்கெனவே விரயமாகியிருக்கிறது" என்றார்கள். அதற்கு நான் "அது சொல்லாமலே தெரியும்" என்று கூறினேன்.

முன்னால் நான் குறிப்பிட்ட பதிலைத் திருத்திக் கொள்ளும் வகையில் கீழ்க் காணும் பதிலை அளிக்க விரும்புகிறேன்.

மார்ச் 31, 1977 அன்றுள்ளபடி எல்லா கார்ப்பரேஷன்களிலும் சேர்ந்து வந்த இழப்பு க்யூமுலேட்டிவ் லாஸ் ரூபாய் 1,12.90 லட்சமாகும். 31—3—1977 படி கழகங்கள் அனைத்திலும் முதலீடு செய்யப்பட்ட முதல் ரூபாய் 4,552.96 லட்சம். மாநிலப் போக்குவரத்துக் கழகத்தில் மூலதன இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படும் பிரச்சினை எதுவும் இல்லை.

4. ஆளுநர் உரைமீதான விவாதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாளர்கள் வே. தங்கப்பாண்டியன், கே. மீனாட்சிசுந்தரம், செ. முத்துசாமி, க. இராமமூர்த்தி ஆகியோர் ஆளுநர் உரையின் மீதான தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை அவர்கள் முன்மொழிந்து அவை வழிமொழியப்பட வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் அவையில் இல்லை.

திரு. செ. முத்துசாமி அவையில் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்.

"1. மூன்றாவது ஊதியக் குழு அறிக்கையை ஏற்று அரசு அறிவிப்பு வெளியிடும் தேதியை அறிவிக்கப்படாதது வருந்தத்தக்கது.

2. அனைத்துத் துறை கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதுபற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.